TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033643

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 3/2017 Date: நாள் 21.06.17

2. (i) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 07.06.17 Date to : நாள் வரை 16.06.17 மற்றும் 21.06.17

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.06.17 Time : நேரம் 10.15

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written ✓/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70 கி.மீ தென்மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி மின் பொறியாளர் அலுவலகம் பண்ணைக்காடு, கொடைக்கானல் Tk திண்டுக்கல் மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. ஜெயராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் த/பெ சண்முகசுந்தரம்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/17 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் கட்டிட அடிமனை (g) Address : முகவரி கலைமுத்து நகர், காலிங்கபுரம் பொள்ளாச்சி, கோயமுத்தூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மகேஸ்வரன் உதவி மின் பொறியாளர், பண்ணைக்காடு உதவி மின் பொறியாளர் அலுவலகம், கொடைக்கானல் தாலுகா திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved : ---
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ---
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துசமர்ப்பிக்கிறேன்:திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 21.06.2017ம் தேதி காலை 10.15 மணியளவில் அலுவலகத்தில் இருந்தபோது கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மகாலிங்கபுரம், கமலமுத்துநகரைச் சேர்ந்த சண்முகானந்தம் அவர்களின் மகன் திரு. S.விஜயராஜன் என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று விசாரித்ததில், வாதி கடந்த 2015ம் வருடம் திண்டுக்கல் மாவட்டம் பண்ணைக்காடு கிராமத்தைச் சேர்ந்த பாலமுருகன் என்பவரிடமிருந்து பண்ணைக்காடு பிரிவு அருகே உள்ள 15 செண்ட் நிலத்தை கிரையமாக பெற்ற இடத்தில் புதியதாக வீடுகட்டுவதற்கு தற்காலிகமாக மின் இணைப்பு கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு பண்ணைக்காடு உதவி மின் பொறியாளர் திரு.மகேஸ்வரன் அவர்கள் வாதியிடம் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணம் ரூ.1650/-ம், லஞ்சமாக ரூ.6,350/-ம் ஆக மொத்தம் ரூ.8,000/- கேட்டதாக இருந்தது. மேற்படி புகாரின் நகலை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியதின் பேரில் பூர்வாங்க விசாரணை PE.No.239/2017/EB/DL, நாள்:21.06.2017-ன்படி விசாரணை மேற்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் P.E.No.239/2017/EB/DL, நாள்:21.06.2017-ன்படி பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ....................
Rank: நிலை .................... No. எண் ..........

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:3/2017 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

அதன் செயலாக சிறப்பு சார்பு-ஆய்வாளர் 1458 திரு.M.சந்திரசேகர் அவர்களை அனுப்பி பண்ணைக்காடு உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று, உதவி மின்பொறியாளர் திரு.மகேஸ்வரன் அவர்களை சந்தித்து வாதியிடம் லஞ்சப்பணம் கேட்பது சம்மந்தமாக குரல் பதிவு செய்ய அனுப்பப்பட்டது. அதன்படி வாதி பண்ணைக்காடு உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று, எதிரியை சந்தித்தபோது நடந்த உரையாடல்கள் குரல் பதிவு செய்யப்பட்டது. அதில் எதிரி வாதியிடம் லஞ்சப்பணம் கேட்பது சம்மந்தமான வாதியின் புகார் மனுவின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு வாதி மற்றும் எதிரி ஆகியோர்களின் முன் நடத்தை பற்றியும் விசாரணை செய்தும், காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் ஒப்புதலை 21.06.2017ம் தேதி மாலை 18.30 மணிக்கு பெற்றும், மேற்படி உதவி மின் பொறியாளர் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 7ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால் 21.06.2017ம் தேதி மாலை 18.45 மணிக்கு திண்டுக்கல் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.03/2017, பிரிவு 7 ஊழல் தடுப்புச்சட்டம் 1988ன்படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் விபரம் பின்வருமாறு பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், அய்யா, நான், கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுகா, பண்ணைக்காடு ஆகும். நான், B.Arch படித்துவிட்டு, கட்டிட அழகியல் வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். நான் கடந்த 2015ம் வருடம் எங்கள் ஊரைச் சேர்ந்த பாலமுருகன் என்பவரிடமிருந்து பண்ணைக்காடு பிரிவு அருகே உள்ள 15 செண்ட் நிலத்தை கிரையமாக பெற்றேன். எனது இடத்தின் சர்வே எண்.454/1A, 454/1-ன் ஆவண எண்.2809/2015 ஆகும். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக தற்காலிக மின் இணைப்பு பெறவேண்டி இருந்தது. அதற்காக கடந்த 07.6.2017ம் தேதி நான், எனது நண்பர் பிரித்திவிராம் உடன் பண்ணைக்காடு உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று, அங்கு பணிபுரியும் உதவி மின்பொறியாளர் திரு.மகேஸ்வான் அவர்களை சந்தித்து, எனது இடத்திற்கு தற்காலிக மின் இணைப்பு பெறுவது பற்றி கேட்டோம். அப்போது அவர், தற்காலிக மின் இணைப்பு வழங்குவதற்கு ரூ.1,650/- செலவாகும் என்றும், சீனியாரிட்டி வரும்போது கிடைக்கும் என்றும் ரூ.8,000/-ம் எனக்கு கொடுத்தால் உடனே இணைப்பு கொடுக்கமுடியும் என்றும் கூறினார். அப்போது

அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர், ரூ.1,650/- அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய பணம் என்றும், மீதம் ரூ.6,350/- அவருக்காகும் செலவு என்றும் கூறினார். பின்பு 13.6.2017ம் தேதி காலை சுமார் 10 மணிவாக்கில் பண்ணைக்காடு உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு நானும், எனது நண்பர் பிரித்திவிராமும் Tariff-VI-SQ-ன்படி மின் இணைப்பு பெறவேண்டி மேற்படி அலுவலகம் சென்றோம். அங்கு வேலை பார்க்கும் பெண் ஊழியர் சுதா என்பவர், என்னிடம் அருகில் உள்ள EB B-கிரேடு காண்ட்ராக்டர் சரவணன் என்பவரிடம் போய், விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து வாங்கிவரும்படி சொன்னார். அவர் கூறியதுபோல் காண்ட்ராக்டர் சரவணனிடம் சென்று கேட்டபோது, அதற்கு அவர் Tariff-VI-SQ விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வழங்க ரூ.600/- வேண்டுமென்று கேட்டார். நானும் அதற்குரிய செலவுத்தொகையினை கொடுத்துவிட்டு, அவர் தயார்செய்து கொடுத்த விண்ணப்பத்தில் இணைக்கவேண்டிய தமிழ் நாடு மின்சார வாரிய சோதனை அறிக்கை படிவம்-அ ரோஸ், மஞ்சள், வெள்ளை மற்றும் பச்சை நிறமுடைய 4 படிவங்களை பூர்த்திசெய்து, அவருடைய முத்திரை வைத்து கையொப்பமிட்டு, மேலும் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் Undertaking type செய்து அதில் என்னிடம் கையொப்பம் பெற்றும், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப மனுவுடன் சுதா என்பவரிடம் கொடுத்துவிட்டார். சுதா என்பவர் விண்ணப்ப மனுவை பூர்த்திசெய்து, உதவி மின்பொறியாளரை நேரடியாக சந்தித்து விண்ணப்பத்தினை கொடுக்குமாறு என்னிடம் கூறி, விண்ணப்பத்தினை கொடுத்துவிட்டார். நானும், மேற்படி உதவி மின்பொறியாளரை இரண்டு மூன்று முறை அவரது அலுவலகத்திற்கு சென்றபோது பார்க்கமுடியவில்லை. பின்னர் எனது செல்போனிலிருந்து, அவரது செல்போனிற்கு பேசியபோது அங்குள்ளேன், இங்குள்ளேன் என்று அலட்சியமாக என்னிடம் கூறினார். அதன்பிறகு மீண்டும் எனது செல்போன் எண்.8883794672-ல் இருந்து 16.6.2017ம் தேதி உதவி மின்பொறியாளரிடம் அவரது அலைபேசி எண்.9445852772-ல் தொடர்புகொண்டு பேசியபோது, பழனியில் இருப்பதாகவும், அங்கு வந்து சந்திக்குமாறும் கூறினார். நானும், எனது நண்பர் பிரித்திவிராமுடன் உடனே பழனிக்குச் சென்று அங்கு உதவி மின் பொறியாளர் திரு.மகேஸ்வரனிடம் செல்போனில் பேசினேன். அப்போது அவர், என்னை தாழையூத்து என்ற இடத்திற்கு வரும்படி கூறினார். நானும், எனது நண்பரும் அங்கு சென்று அவரை சந்தித்தபோது, எனது தற்காலிக மின் இணைப்பு வேண்டி பூர்த்தி செய்திருந்த விண்ணப்பத்தினை வாங்கிப் பார்த்துவிட்டு, ரூ.8,000/- பணம் எங்கே என்று கேட்டார். நான் தற்போது பணம் கொண்டுவரவில்லை என்று சொன்னவுடன் பணம் கொடுத்தால் தான் உடனே வேலை முடித்துக் கொடுக்கமுடியும் என்று சொல்லி,

விண்ணப்ப மனுவை என்னிடம் கொடுத்துவிட்டார். அப்போது மீண்டும் நான் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடம் கெஞ்சியபோது, கோபமாக அதெல்லாம் குறைக்க முடியாது ரூ.8,000/-ம் கொடுத்தால் தான் உன்னுடைய விண்ணப்ப மனுவை ஏற்கமுடியும் என்று சொல்லி, எனது அலுவலகத்திற்கு வந்து, என்னை பார்த்துக் கொடுங்கள் என்று கறாராக கூறிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல், பணத்தை ரெடிபண்ணிவிட்டு வந்து பார்க்கிறேன் என்று கூறிவிட்டு விண்ணப்ப மனுவுடன் வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர், நான் எனது வீட்டிற்கு வந்தபிறகு, Tariff-VI SQ மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.6,350/-ஐ லஞ்சமாக பண்ணைக்காடு உதவி மின்பொறியாளர் திரு.மகேஸ்வரன் அவர்களுக்கு கொடுத்து பெறுவதற்கு என் மனம் விரும்பவில்லை. அதனால் எனது வேலையை உடனே முடித்துக் கொடுப்பதற்காக என்னிடம் ரூ.6,350/- லஞ்சமாக கேட்ட பண்ணைக்காடு உதவி மின்பொறியாளர் திரு.மகேஸ்வான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டு, இந்த மனுவினை கொடுக்கின்றேன். இத்துடன் பண்ணைக்காடு தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் கொடுப்பதற்காக தயார்செய்யப்பட்ட விண்ணப்ப மனுவையும், உதவி மின் பொறியாளர் திரு.மகேஸ்வான் அவர்கள் கேட்ட பணம் ரூ.8,000/-மும் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/xxxxxx திரு. S.விஜயராஜன், 21.06.2017. Sir, Received the complaint on 21.06.2017 at 10.15 hrs and the same was intimated to the SP SR, DVAC, Chennai for necessary orders, on 21.06.2017. Sd/-xxx Tmt.J.Rupa Geetharani, Inspector of Police, V&AC., Dindigul: 21.06.2017, Sir, as per the order of the Superintendent of Police, Southern range, Vigilance and Anti-Corruption, Chennai in PE.239/2017/EB/DL, dated:21.06.2017, a preliminary Enquiry was conducted, regarding the complaint. On the findings of the Preliminary Enquiry and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, V&AC., Chennai, the case in Dindigul V&AC., Cr.No.03/2017, u/s.7of Prevention of Corruption Act, 1988 was registered on 21.06.2017 at 18.45 hrs Sd/xxxx J.Rupa Geetharani, 21.06.2017, Inspector, V&AC., Dindigul. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் குரல் பதிவு செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.